செ.வெ.எண்: நாள்: 24.08.2020

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# கொடீசியா கொரோனா சிகிச்சை மையத்தில் அமைக்கப்பட்ட படுக்கை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

கோயம்புத்தூர் மாவட்டம், கொடீசியா கொரோனா சிகிச்சை மையத்தில் அமைக்கப்பட்ட படுக்கை வசதிகளை இன்று(24.08.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகராட்சி உதவி ஆணையர் (மத்திய மண்டலம்) திரு.மகேஷ் கனகராஜ், வட்டாட்சியர்(வடக்கு) திரு.மகேஷ்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், முதற்கட்டமாக தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல், அவர்கள் சார்ந்த பகுதிகளில் தொடர்பிலிருந்தவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளுதல், தொடர் தொற்றுகள் கண்டறியப்படும் பகுதிகளை கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவித்து தனிமைப்படுத்துதல் என பல்வேறு தொடர்ச்சியான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், அரசு அறிவுரை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு முயற்சியாக, கொரோனா அறிகுறியில்லாத நிலையில் தொற்று உள்ளவர்களுக்கு என தனியாக சிகிச்சை அளித்திட ஏதுவாக கோயம்புத்தூர் கொடிசியா வளாக அரங்கில் செயல்பட்டு வரும் பிரத்யேக கண்காணிப்பு மையத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இம்மையத்தில் 668 படுக்கை வசதிகள் உள்ளன.இம்மையத்தில் 24 மணி நேரமும் மருத்துவர்கள், மருத்துவபணியாளர் மற்றும் சுகாதார பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். மாநகராட்சி மூலமாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யும் பணியும், பிற தூய்மைப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் அந்தப் பகுதிக்குள் வெளிநபர்கள் யாரும் நுழையாத வண்ணம் முறையாக காவல்துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இங்கு தேவைப்படும் காவலர்களை பணியில் அமர்த்த காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இங்கு நோயாளிகளுக்குக்கு சித்த மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் சிகிச்சை பெற்றுவரும் கொரோனா நோயாளிகளுக்கு சதுரங்கம், கேரம் உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொடீசியாவிலுள்ள " B " அரங்கத்தில் 464 படுக்கை வசதிகளுடன் கூடிய தனி பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் நாளை முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இம்மையத்திலும், அறிகுறி இல்லாமல் கொரோனா தொற்று ஏற்பட்டவர்கள் தங்கவைத்து சிகிச்சை அளிக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து, சித்தாபுதூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளில் அமைக்கப்பட்டுள்ள **"Corona Triage centre"** மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கோவை மாநகராட்சி மத்திய மண்டலப் பகுதியில் உள்ள கொரோனா தொற்று அறிகுறி கண்டறியப்படுபவர்கள் எந்த மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்பது பற்றி தெளிவாக தெரிவித்து அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கபடுவார்கள். வைரஸ் தொற்றின் பாதிப்பிற்கு தகுந்தவாறு மருத்துவர்களின் ஆலோசனையின்படி, நோயாளிகள் தேவைப்படும் மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைகளுக்கு மாநகராட்சியால் ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் அழைத்து செல்லப்படுவார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றின் தன்மை குறைவாக உள்ளவர்கள், அதற்கு தகுந்தவாறு கண்காணிப்பு மையத்திற்கு சிகிச்சைக்கக அனுப்பி வைக்கப்படுவார்கள். மாநகராட்சியில் மத்திய மண்டலத்தில் நாளை முதல் இம்மையம் செயல்பாட்டுக்கு வருகிறது. இம்மையத்தினை தொடர்பு கொள்ள என்ற 0422 4279467 எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம். இதுபோல ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு வார காலத்தில் மையங்கள் தொற்று ஏற்பட்டவர்களின் வசதிக்காக அமைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்.**